# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/41 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/41 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண்: டபிளியு. 68 (70)/76.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1976 திசெம்பர் 17 ஆந் தேதி.

#### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் அவசரகால (மேய்ச்சல் நிலங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. தகுதிவாய்ந்த அதிகாரி இலங்கையிலுள்ள அரச நிலம் எதுவும் மேய்ச்சல் நிலமாக ஒதுக்கப்படல் வேண்டுமென கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் காலத்துக்குக்காலம் வெளிப்படுத்தலாம். அத்தகைய நிலம், இதன்மேல் இவ்வொழுங்குவிதிகளில் "மேய்ச்சல் நிலம்" எனக் குறிப்பீடு செய்யப்படுகிறது.

3. தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதற்கென எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த வேறு ஆள் எவரும், மேய்ச்சல் நிலம் எதனையும் பயன்படுத்தல் அல்லது அதில் இருப்பாட்சி செய்தல் அல்லது பயன்படுத்தப்பட அல்லது இருப்பாட்சி செய்யப்படச் செய்தல் ஆகாது.

4. (1) ஆள் எவரும் 3 ஆம் ஒழுங்குவிதியை மீறி மேய்ச்சல் நிலம் எதிலும் இருப்பாட்சி செய்கின்றாரென தகுதிவாய்ந்த அதிகாரி கருதுமிடத்து, அவர் பொலிசுப் பரிசோதகர் தரத்துக்குக் குறையாத தரத்தினரான பொலிசு அலுவலர் ஒருவருக்கு அப்பொருள்பட ஒரு சான்றிதழை வழங்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, எவ்வாள் தொடர்பில் (1) ஆம் பந்தியின் கீழான ஒரு சான்றிதழை வழங்குகின்றாரோ, அவ்வாள், இதன்மேல் இவ்வொழுங்கு விதிகளில் "சட்டவிரோத இருப்பாட்சியாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்.

(3) ஒராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு சான்றிதழை வழங்கு முன்னர், சட்டவிரோத இருப்பாட்சியாளர் தம்மை எதிர்காத்துப் பேசுதற்கு அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தினை அளிக்கும் நோக்கத்திற்காக, தகுதிவாய்ந்த அதிகாரி, தாம் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையை நடாத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் பந்தியின்கீழ் விசாரணையொன்றை நடாத்தும் நோக்கத்திற்காக, தகுதிவாய்ந்த அதிகாரியானவர், சட்டவிரோத இருப்பாட்சியாளருக்கு அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்தல் அல்லது சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும். சட்டவிரோத இருப்பாட்சியாளருக்கு ஓர் அறிவித்தலை நேரில் சேர்ப்பிப்பதற்கு அல்லது சேர்ப்பிக்கப்படச் செய்தற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி இயலாதவராயிருக்குமிடத்து, சம்பந்தப்பட்ட நிலத்தில் துலக்கமானவோர் இடத்தில் ஒட்டப்பட்ட ஓர் அறிவித்தலானது, அச்சட்டவிரோத இருப்பாட்சியாளருக்குப் போதியமுறையில் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலாகக் கருதப்படல் வேண்டும்.

5. (1) சம்பந்தப்பட்ட மேய்ச்சல் நிலத்திலிருந்து சட்டவிரோத இருப்பாட்சியாளரை வெளியேற்றுதலும், அத்தகைய மேய்ச்சல் நிலத்தின்மீதுள்ள ஏதேனும் வேலியை, கட்டடத்தை அல்லது வேறு கட்டமைப்பினை அழித்தலும், அத்தகைய மேய்ச்சல் நிலத்தில் காணப்படும் எவையேனும் பயிர்ச் செய்கைக்குரிய ஆயுதங்களை, கருவிகளை, கால்நடைகளை அல்லது விளைபொருட்களைக் கைப்பற்றுதலும், 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து சான்றிதழைப் பெறும் பொலிசு அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறுயினும், அவரது சட்டமுறையான உரிமைகளைத் தாழ்த்தும் வகையில் அவர் வெளியேற்றப்பட்டமையால் அல்லது அவரது ஆதனம் கைப்பற்றப்பட்டமையால் இன்னலுறும் அத்தகைய எவரேனும் சட்டவிரோத இருப்பாட்சியாளர் தம்மை மீளவும் குடியமர்த்தும்படி வேண்டி, அல்லது அரசுக்கெதிராக சேதலீ கோரி, தோதான ஒரு நீதிமன்றத்தில் குடியியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

(2) ஒராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பொலிசு அலுவலர், இவ்வொழுங்குவிதியின் கீழான தமது கடமைகளைப் புரிகையில், நியாயமாக அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய வலோற்காரத்தைப் பிரயோகிக்கலாம் என்பதுடன், பொலிசுப் படையின் வேறு உறுப்பினர்கள் எவரினதும் உதவியையும் கேட்டுப் பெறலாம்.

6. இவ்வொழுங்குவிதிகளின் முற்போந்த ஏற்பாடுகள் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் சட்ட விரோத இருப்பாட்சியாளருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எவற்றையும் தொடுப்பதை அல்லது தொடர்ந்து நடாத்துவதைத் தடை செய்வதாகப் பொருள்கொள்ளப்படல் ஆகாது.

7. (1) ஆள் எவரும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்றவிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஒரு நீதிவான் முன்னர் விளங்கப்பட்டு அவர்மீது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல், அவர் ஐந்நூறு ரூபாவிற்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்தைச் செலுத்தற்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் ஆள் எவர்மீதும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நீதிவானனவர், (1) ஆம் பந்தியின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனையுடன் மேலதிகமாக, 5 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் கைப்பற்றப்பட்ட எவையேனும் பயிர்ச்செய்கைக்குரிய ஆயுதங்களை, கருவிகளை, கால்நடைகளை அல்லது விளைபொருட்களைப் பறிமுதல் செய்யும்படியும் கட்டளையிடலாம்.

இவ் வொழுங்குவிதிகளில்—

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, ஏதேனும் அரச நிலம் தொடர்பில், அவ்வரச காணி எந்த நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் என்று, அல்லது அத்தகைய அரசாங்க அதிபரினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவரும் என்று பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.